# தேவனுடைய ஏழு ஆவிகள் யாவை?

இதர வேதாகமக் கேள்விகள்

"தேவனுடைய ஏழு ஆவிகள்" வெளிப்படுத்துதல் 1:4; 3:1; 4:5; மற்றும் 5:6 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவனுடைய ஏழு ஆவிகள் குறிப்பாக அடையாளம் காணப்படவில்லை, எனவே நாம் இதுதான் என்று பிடிவாதமாக இருக்க முடியாது. வெளிப்படுத்தல் 1:4, ஏழு ஆவிகள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருப்பதாக குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்து தேவனுடைய ஏழு ஆவிகளை "பிடித்துள்ளார்" என்று வெளிப்படுத்துதல் 3:1 குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 4:5 தேவனுடைய ஏழு ஆவிகளை தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கும் ஏழு எரியும் பொற்குத்து விளக்குகளுடன் இணைக்கிறது. வெளிப்படுத்துதல் 5:6 ஏழு ஆவிகளை ஆட்டுக்குட்டியின் "ஏழு கண்களால்" அடையாளப்படுத்துகிறது மற்றும் அவை "பூமியெங்கும் அனுப்பப்படுகிறவை" என்று கூறுகிறது.

தேவனுடைய ஏழு ஆவிகள் பற்றி குறைந்தது மூன்று சாத்தியமான விளக்கங்கள் உள்ளன. முதலாவது, தேவனுடைய ஏழு ஆவிகள் பரிசுத்த ஆவியின் அடையாளமாக இருக்கின்றன. வேதாகமம், குறிப்பாக வெளிப்படுத்துதல்

புத்தகம், முழுமை மற்றும் நிறைவு ஆகியவற்றைக் குறிக்க எண் 7 ஐப் பயன்படுத்துகிறது. "ஏழு ஆவிகளில்" "ஏழு" என்பதன் அர்த்தம் அதுவாக இருந்தால், அது தேவனுடைய ஏழு வெவ்வேறு ஆவிகளைக் குறிக்கவில்லை, மாறாக நிறைவான மற்றும் பரிபூரணமான பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. இரண்டாவது பார்வை என்னவென்றால், தேவனுடைய ஏழு ஆவிகள் ஏழு தேவதூதர்களைக் குறிக்கிறது, ஒருவேளை சேராபீன்கள் அல்லது கேருபீன்கள். வெளிப்படுத்துதல் புத்தகத்தில் (வெளிப்படுத்துதல் 4:6-9; 5:6-14; 19:4-5) விவரிக்கப்பட்டுள்ள பல தேவதூதர்களுடன் இது பொருந்தும்.

மூன்றாவது சாத்தியம் ஏசாயா 11:2-ஐ அடிப்படையாகக் கொண்டது, அது கூறுகிறது, “ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்." இது தேவனுடைய ஏழு ஆவிகளை விளக்கக்கூடும்: (1) கர்த்தருடைய ஆவி, (2) ஞானத்தின் ஆவி, (3) புரிந்துகொள்ளும் ஆவி, (4) ஆலோசனையின் ஆவி, (5) வல்லமையின் ஆவி, (6) புரிந்துகொள்ளுதலின் ஆவி, (7) கர்த்தருக்குப் பயப்படுகிற ஆவி. ஏழு ஆவிகள் யார்/என்ன என்று வேதாகமம் நமக்குக் குறிப்பாகச் சொல்லவில்லை,

ஆனால் முதல் விளக்கம், அவர்கள் பரிசுத்த ஆவியானவர் என்பது பெரும்பாலும் தெரிகிறது.

---

மூலம் / Source: https://www.gotquestions.org/Tamil/Tamil-seven-spirits-God.html | English: https://www.gotquestions.org/seven-spirits-God.html

www.GotQuestions.org · https://www.gotquestions.org/Tamil · © Copyright Got Questions Ministries · questions@gotquestions.org